[2018 ஜூன் 27

140 ஆண்டுக்கால வறட்சியில்கூட அந்தக் கிணறுகளெல்லாம் வற்றவே இல்லை. அந்த அளவுக்கு இருந்த இடம் இப்பொழுது பாழ்பட்டுக் கிடக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஏதாவது ஒரு கல்லூரியை அல்லது ஆராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கித்தர முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய மேல்செங்கம் பகுதியில் இருக்கின்ற அந்த நிலம் மத்திய அரசுக்குச் சொந்தமானது, தமிழக அரசுக்குச் சொந்தமானதல்ல. 30 வருடங்கள் குத்தகைக்கு எடுத்து, அதில் ஆராய்ச்சி நிலையம் நடத்திவந்தோம். அந்தக் காலக்கெடு முடிந்தவுடன் ஒப்படைத்துவிட்டோம். தற்போது வனத் துறை அதை எடுத்துச் செயல்படுத்திவருகிறது. வனத் துறையிடம் அந்த நிலம் இப்போது இருக்கிறது. வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் தெரிவித்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

228—

படகுக் குழாம்

***5844—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் உள்ள புளிப்பாக்கம் கொளவாய் ஏரியில் படகுக் குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூன் 27]

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் சகோதரி திருமதி ம. வரலட்சுமி அவர்கள், செங்கல்பட்டு தொகுதியில் உள்ள புளிப்பாக்கம், கொளவாய் ஏரியில் படகுக் குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று வினவியுள்ளார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதியில் உள்ள புளிப்பாக்கம் கொளவாய் ஏரியில், சுற்றுலாத் துறைமூலம் படகுக் குழாம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதி என்பது, தலைநகர் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை செல்வதற்கு (குறுக்கீடு) கிருஷ்ணகிரி மாவட்டம், தருமபுரி மாவட்டம், வேலூர் மாவட்டத்தைத் தவிர்த்து. . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மனோ தங்கராஜ், வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு தருவேன். இதுவரை உங்களுக்கு ஒரு மூலக் கேள்வி, 4 துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். அதற்குப் பின்னாலும் நீங்கள்*

உட்கார்ந்துகொண்டு கேட்டால் எப்படி? கேட்காதவர்களுக்கு நான் வாய்ப்பு தர வேண்டும் அல்லவா! (குறுக்கீடு) இப்படி கேட்டால் எப்படி? திரு. புகழேந்தி, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சு. புகழேந்தி: கிருஷ்ணகிரி மாவட்டம், தருமபுரி மாவட்டம், வேலூர் மாவட்டத்தைத் தவிர்த்து, கன்னியாகுமரி வரை அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லக்கூடிய பிரதான தேசிய நெடுஞ்சாலை அமைந்திருக்கின்ற பகுதி மதுராந்தகம் தொகுதி. குறிப்பாக, சென்னையிலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாகச் செல்லும்போது மாமல்லபுரத்திற்கு பக்கத்திலே முட்டுக்காட்டிலும் படகுக் குழாம் சுற்றுலாத் துறைமூலமாக செயல்படுகிறது. எனது தொகுதி வழியாகச் செல்லும் 700, 850 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையில் பயணம் செய்யக்கூடிய பயணிகள் இளைப்பாறுவதற்கோ, இன்புற்று செல்வதற்கோ சுற்றுலாத் துறையின்மூலம் படகுக் குழாம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 16-6-2017-ல் என்னுடைய கன்னிப்பேச்சிலே மதுராந்தகம் ஏரியைத் தூர்வாரி, அங்கே சுற்றுலாத் துறைமூலம் படகுக் குழாம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். எனவே, அந்தக் கருத்தினை மையமாக வைத்து, மதுராந்தகம் ஏரியைத் தூர்வாரி, தென் மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய இலட்சக்கணக்கான பயணிகளும், சுற்றுலாப் பயணிகளும் பயன்பெறத்தக்க வகையில், அங்கு படகுக் குழாமை ஏற்படுத்தித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகுக் குழாம் அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு மதுராந்தகம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவருடைய தொகுதியிலிருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள பல்வேறு பகுதிகளைப் பற்றிக் கூறி, அந்தப் பகுதிகளிலெல்லாம் படகுக் குழாம் இல்லை என்றும், தன்னுடைய பகுதியில் படகுக் குழாம் அமைக்க வேண்டுமென்றும் கோரியிருக்கின்றார்கள்.

முற்பகல் 10-40

படகுக் குழாம் அமைப்பதற்கு குறைந்த அளவு தண்ணீர் இருக்கின்ற ஏரியாக இருக்கவேண்டும். அதேநேரத்தில் நீர்ப் பாசனத்திற்குப் பயன்படாத நீர்ப்பிடிப்புப் பகுதியாக இருக்கும்போது, படகு சவாரி செய்வதற்கு சுற்றுலாத் துறைமூலம் ஏற்பாடு செய்யலாம். மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் பகுதிகளிலும், மக்களின் விவசாயப் பாசனத்திற்கு ஆதாரமாக விளங்குகின்ற பகுதிகளிலும் சுற்றுலாத் துறைமூலம் உல்லாசப் படகு சவாரி செய்வதற்கு படகுக் குழாம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அவ்வாறு படகுக் குழாம் அமைக்கும்போது சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு பாதுகாப்பு வசதிகளை அந்தந்த நீர்ப்பிடிப்புப் பகுதிகளைப் பராமரிக்கும் துறைகள் மேற்கொள்ள வேண்டும். எனவே, நான் குறிப்பிட்ட வழிவகைகள் சாத்தியப்படும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரியை மேம்படுத்த 24 கோடி ரூபாய் நிதியை அரசு ஒதுக்கியுள்ளது. 55 ஏக்கர் பரப்பளவுள்ள வேளச்சேரி ஏரியில், சென்னையின் பல பகுதிகளிலிருந்து வரும் கழிவு நீர் கலந்துவிடுகிறது. அதைத் தடுத்து தூய்மைப்படுத்த வேண்டும். ஏரியைச் சுற்றிலும் நடைபயிற்சிப் பாதை அமைக்கும் பணி நிலுவையில் இருக்கிறது. அதை முழுமையாக முடித்து, படகுக் குழாம் அமைத்து அழகுபடுத்தினால், அது வேளச்சேரிக்கு மட்டுமல்லாமல், சென்னை நகருக்கே அழகையும் பெருமையையும் சேர்க்கும். எனவே, விரைவாக வேளச்சேரி ஏரியில் தூய்மைப் பணியைத் தொடங்கிட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்*

அவர்கள், வேளச்சேரி பகுதியில் படகுக் குழாம் அமைக்க வேண்டும்; ஏரியில் கழிவுநீர் கலக்கின்ற நிலைப்பாட்டினை மாற்றிட வேண்டும்; சுற்றுப்புறப் பகுதியில் நடைபயிற்சிப் பாதை அமைக்க வேண்டுமென்கின்ற பல்வேறு கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறார்கள். எந்தெந்தப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார். அரசின் சார்பாக வழங்கப்படுகின்ற நிதி ஆதாரத்தின் அடிப்படையில் செய்ய இயலுமா அல்லது மத்திய அரசு வழங்குகின்ற ஆசிய வளர்ச்சி வங்கி நிதியிலிருந்து செய்ய இயலுமா என்பதைப் பார்க்க வேண்டும். ஏனெனில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதியைக் கொண்டு செய்யப்படுகின்ற பணிக்கான நிதியினை துறை கடனாகப்பெற்று திருப்பிச் செலுத்த வேண்டிய சூழ்நிலைகளெல்லாம் இருக்கின்றன. எனவே, சுற்றுலாத் துறை அலுவலர்களைக்கொண்டு மாவட்ட நிருவாகத்தின்மூலம் ஆய்வு செய்ய வேண்டும். அந்த மாவட்டம் திருக்கோயில்கள் நிறைந்த மாவட்டமாக இருக்கும்பட்சத்தில், மத்திய அரசின் மற்றுமொரு நிதியுதவித் திட்டத்தின்கீழ் செலவழிக்க இயலுமா அல்லது மத்திய அரசின் கடலோர வளர்ச்சித் திட்டங்களுக்கு செலவிடும் நிதியிலிருந்து வழங்கிட இயலுமா என்பதையெல்லாம் அறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப நிதிகளைப் பெற்று, அக்கோரிக்கைகள் கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரையில், சுற்றுலாவிற்கு உகந்த ஒரு தொகுதி என்று கூறலாம். ஏனெனில் அத்தொகுதியில் அற்புதமான இயற்கை எழில்கொண்ட பல்வேறு சுற்றுலாத் தலங்கள் இருக்கின்றன. உதயகிரி கோட்டை, பத்மநாபபுரம் அரண்மனை, தொட்டிப் பாலம், பேச்சிப்பாறை அணை, திற்பரப்பு நீர்வீழ்ச்சி போன்ற அற்புதமான இடங்கள் இருக்கக்கூடிய பகுதி அது. எனவே, இந்த சுற்றுலாத் தலங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து, அதை ஒரு சூழியல் சுற்றுலாத் தலம் என அறிவித்து, அதற்கான

2018 ஜூன் 27]

அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், பேருந்து வசதிகளையும் செய்து தந்தால், கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க முடியும் என்பதோடு, அந்த மாவட்டத்தினுடைய பொருளாதாரத்தையும் உயர்த்த முடியும். எனவே, அதை சூழியல் சுற்றுலாத் தலமாக அறிவித்து, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள் கேட்ட கேள்விக்கு, சுற்றுலாத் துறையின்மூலம் அந்த குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, நிதிநிலைக்கேற்ப தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். செல்வராசு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

229—

விரைவுப் பேருந்து

***7917—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, தொட்டியத்திலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?